# ஸ்ரீ வைஷ்னவ தாஸர்கள் என்ற சீர்மிகு ஸ்ரீ ராமானுஜ தாஸர்கள்



*நஞ்சீயர்*

எம்பெருமானார் காலத்தில் திருவரங்கத்தில் தொண்டர்கள் கூடினர். அவர்கள் அந்தணர்கள் என்றும், அல்லாதவர்கள் என்றும் வேறுபாடில்லாமல் அனைவரும் தாஸர்கள் என்றே அழைக்கப் பெற்றனர். ஸ்ரீ ராமனுஜருடைய திருவடிகளை ஆஸ்ரயித்தும், தங்களை "**அடியேன் ராமானுஜதாஸன்**," என்றே முன்னிலைப்

படுத்தி ஒருவரை ஒருவர் வணங்கி வழி பட்டனர். பெண்டிர் பெரு மக்களும் "**அடியேன் ராமனுஜதாஸி**" என்றே அறிமுகம் செய்து கொண்டனர். இவ்வாறு வாழ்ந்த பல நூறுஅடியார்களில் **பெரியகோயில் தாஸர்** என்பவரும் ஒருவர்.

திவ்யப் பிரபந்தப் பேருரைகளிலும், வார்த்தாமாலையிலும், மறை பொருள் விளக்க நூல்களிலும், குருபரம்பரை நூல்களிலும் அடியார்களைப் பற்றிக் காணலாம்.

## பெரியகோயில் தாஸர்

பெரியகோவில் தாஸர் நஞ்சீயரை ஆஸ்ரயித்து, அரிய பல உபதேசங்களை பலநாள் கேட்டு வந்து, இடையில் வராமல் நின்று விட்டார். திடீர் என்று ஒருநாள் வந்து நஞ்சீயரை சேவிக்க, நஞ்சீயரும், பலநாட்கள் வராமல் இருந்து விட்டாயே? என்று வினவினார். அதற்குப் பெரியகோயில் தாஸர், தேவரீர், ஒரு நாள் அருளிச் செய்ததையே நெஞ்சில் எப்போதும் நினைத்துக் கொண்டிருந்தால் போறாதோ ? தினந்தோறும் தேவரீரிடத்தில் வந்து கேட்க வேண்டுமோ? என்றார்.

அதற்கு நஞ்சீயர், கெடுவாய்! தினந்தோறும் ஆச்சார்யனிடத்திலே நல்வார்த்தை கேட்க வேண்டும் என்ற நம்பிக்கையைத் தான் இழந்து விட்டாய்!

"நாடோறும் ஏனத்துருவாய் உலகிடந்த ஊழியான் பாதம் மருவார்க்கு உண்டோமோ வான்?" (முதல் திருவந்தாதி-91)

(வராஹ வடிவு கொண்டு , நீரிலிருந்து பூமியை எடுத்த எம்பெருமானுடைய திருவடிகளை தினந்தோறும் வணங்காதவர்களுக்கு பரமபதம் கிடைக்குமோ?) என்கிற இப்பாசுரத்தையும் நீ கேட்டதிலையோ ? என்றார்.

**ஆச்சாரியரை தினந்தோறும் ஸேவித்து நல்வார்த்தைகள் கேட்க வேண்டுமோ? ஒரு நாள் ஸேவித்து அன்று ஆச்சார்யன் கூறியதையே நினைவில் கொண்டால் போதாதோ? எனில் போதாது.** உலகியல் வாழ்க்கையில் கிடந்து உழலும் மனிதனைப் பிற விஷயங்கள் இழுத்துச் சென்று விடும். எனவே தினந்தோறும் ஆச்சார்ய உபதேசமும், எம்பெருமானுடைய வழிபாடும் அவசியம் வேண்டும் என்பது நஞ்சீயரின் திருவுள்ளக் கருத்தாகும்.